திருநெல்வேலி
● புதன் ● ஜனவரி 22 2020
www.dinamalarnellai.com
தினமலர் நெல்லை

# சாரதா கல்லூரியில் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருநெல்வேலி, ஜன. 22–

பாளை., சாரதா கல்லூரியில் அவசர கால விபத்து தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

பாளை., சாரதா மெட்ரிக் பள்ளி மற்றும் கல்லூரியில் அவசர காலங்களில் பாதுகாப்பாக வெளியேறுதல் குறித்த ஒத்திகைப்பயிற்சி மாவட்ட தீயணைப்புத்துறை அலுவலர் மாகலிங்கமூர்த்தி, உதவி அலுவலர் சுரேஷ் ஆனந்த் தலைமையில் நடந்தது. நிலைய அலுவலர் வீரராஜு மேற்பார்வையில் நடந்த இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சுமார் 25க்கும் மேற்பட்ட வீரர்கள் கலந்து கொண்டு பாதுகாப்பு முறை குறித்து விளக்கம் அளித்தனர். என்.எஸ்.எஸ்., மாணவிகள், பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



பாளை., சாரதா கல்லூரியில் தீயணைப்புத்துறை சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.